**OS.No**. 38/2017

**PW**3 - சந்திரசேகர் த/பெ. லிங்கப்ப நாயக்கர்

நாள். 21.02.2023

வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில்1 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து சம்மன் ஏதாவது எனக்கு வந்ததா என்றால் இல்லை. நான் 1995 முதல் 2013 வரை சேகர் சால்ட் என்ற பெயரில டையிங் நிறுவனத்திற்கு சால்ட் வினியோகம செய்து வந்ததை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். பிரின்ஸ் டையிங் நிறுவனத்திற்கான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ரத்தினசாமி பிரின்ஸ் டையிங் நிறுவனத்தில் பார்டனர் என்ற கோதாவில் கையெழுத்து செய்து கொடுத்தாக கூறும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நான் 2013 ல் எனது நிறுவனத்தை மூடிவிட்டேன்.

2. ராமசாமி கவுண்டரின் குடும்ப விவகாரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். ராமசாமி கவுண்டர் எப்போது இறந்தார் என்பது நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல தெரியும். ராமசாமி கவுண்டர் உடல் நிலை சரியில்லாமல் இருந்ததாக என்னிடம் சொன்னதாக சொல்வது பொய்ய என்றாலும் வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சால்ட் வியாபாரம் செய்ததகா சொல்வதும் ரத்தினசாமி பிரின்ஸ் டையிங் நிறுவனத்திற்காக காசோவை கொடுத்தாக சொல்வது பொய்ய என்றாலும் வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் ரத்தினசாமி கேட்டுக்கொண்டதன் பேரில் அவருக்கு ஆரவாக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி ரத்தினசாமி எனக்கு நண்பரா என்றால் இல்லை வியாபாரம் ரீதில் தெரியும்.சால்ட் வினியோகம் செய்து வந்ததை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நான் உண்மையிலேயே அவ்வாறு வியாபாரம் எதுவும் செய்யவில்லை என்றாலும் அதனால் தான் அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரின்ஸ் டையிங் நிறுவனம் தனிநபர் நிறுவனம்

என்றால் சரியல்ல. அவரும் அவர் அப்பாவும் பங்குதாரர்கள். பிரின்ஸ் டையிங் நிறுவனத்திற்கு சால்ட் வினியோகம் செய்து வந்ததை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். பிரின்ஸ் டையிங் நிறுவனத்துடன் எந்த ஒரு வியாபாரத் தொடாபும் வைத்துக்கொள்ளவில்லை என்றாலும் அதனால் தான் அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2013 ல் கம்பெனியை மூடிவிட்டதால் ஆவணங்களை தாக்கல் செய்ய இயலவில்லை.

2. பிரின்ஸ் டையிங் நிறுவனத்தை பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும் வாதி என்னுடைய நண்பர் என்பதால் ரத்தினசாமி கேட்டுக்கொண்டதன் பேரில் அவருக்கு ஆரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.
பிரின்ஸ் டையிங் நிறுவனம் ஆனது திருப்பூர் கார்பிரேசன் வங்யில் கடன் பெற்று இருந்தார்கள் என்றாலும் அதை அடைத்து விட்டார்கள் என்றாலும் அதை பற்றி தெரியவில்லை.

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/– M.மேகலாமைதிலி
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.